

சென்னை, கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலக வளாகத்தில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் நேற்று முதன்மைக் கல்வி அலுவலர்களுடன் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பள்ளிக் கல்வித் துறை அரசுச் செயலாளர் சோ.மதுமதி , தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் முனைவர் பொ. சங்கர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி மாநில திட்ட இயக்குநர் மருத்துவர் மா.ஆர்த்தி, பள்ளிக்கல்வி சிறப்புச் செயலாளர் திருமதி ஜெயந்தி, மாதிரிப் பள்ளிகள் உறுப்பினர் செயலர் இரா.சுதன் , (வி. ஓய்வு) பள்ளிக்கல்வி இயக்குநர் முனைவர் மு. பழனிச்சாமி மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



சேலம் மத்திய மாவட்டத்தில் உள்ள ஓமலூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட காடையாம்பட்டி, கிழக்கு, மேற்கு ஒன்றியத்தில் சேலம் நாடாளுமன்ற தொகுதி உறுப்பினர். டி. எம். செல்வ கணபதி மற்றும் மாவட்ட கழக செயலாளர். இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ ஆகியோர் .பன்னப்பட்டி, மாரகவுண்டன்புதுர தின்னப்பட்டி உட்பட 50 கிராமங்களில் வாக்களித்த வாக்காளர்களுக்கு. நன்றி தெரிவித்தார்கள் உடன் ஒன்றிய செயலாளர்கள். கே.சி. அறிவழகன், கே.சி.ரவிச்சந்திரன் மற்றும் ஒன்றிய நிர்வாகிகள் இருந்தனர்.

### சாலை விபத்தில் உயிரிழந்த

# பெண் காவலரின் குடும்பத்திற்கு ரூ.25 லட்சம் நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஆக 23-

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி, இரட்டைவயல் கிராமம் அருகில் நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரிழந்த ஆயுதப்படை பெண் காவலரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் ரூ. 25 இலட்சம் நிதியுதவி அறிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டா லின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பு வருமாறு:

தஞ்சாவூர் மாவட்ட ஆயுதப் படை பெண் காவலராக பணியாற்றிவந்த அரியலூர் மாவட்டம், பெரியகிருஷ்ணாபுரம்கிராமத்தைச் சேர்ந்த செல்வி.சுபபிரியா (காவலர் எண்.1680) (வயது 23) த/பெ.சக்திவேல் என்பவர் நேற்று (21.8.2024) மாலை சுமார் 08.30 மணியளவில் பட்டுக்கோட்டை உட்கோட்டம், பேராவூரணி, இரட்டைவயல் கிராமம், கண்ணமுடையார் அய்யனார் கோவில் திருவிழாவின் பாதுகாப்பு பணி முடிந்து தனது தங்குமிடத்திற்கு நடந்து சென்றுகொண்டிருந்தபோது அவரது பின்புறம் பேராவூரணியிலிருந்து இரட்டைவயல் நோக்கி வந்த இருசக்கர வாகனம் எதிர்பாராதவிதமாக மோதிய விபத்தில் தலையில் காயம் ஏற்பட்டு சிகிச்சைக்காக பேராவூரணி அரசு மருத்துவமனையில் முதலுதவி அளிக்கப்பட்டு,மேல்சிகிச்சைக்காக தனியார் மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும், வேதனையும் அடைந்தேன்.

செல்வி. சுபபிரியா அவர்களின் உயிரிழப்பு தமிழ்நாடு காவல்துறைக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

செல்வி. சுபபிரியா அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், உறவினர்கள் மற்றும் அவருடன் பணிபுரிந்தவர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது குடும்பத்தினருக்கு இருபத்தைந்து இலட்சம் ரூபாய் நிவாரண நிதி வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

### திருவொற்றியூர் தொகுதியில்

# 2 இடங்களில் அங்கன்வாடி மையக் கட்டிடங்கள்!

## கலாநிதி வீராசாமி எம்.பி. இன்று அடிக்கல் நாட்டுகிறார்! பகுதிச் செயலாளர் தி.மு. தனியரசு வேண்டுகோள்!

சென்னை, ஆக.23-

வடசென்னை நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட, திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதியில் வார்டு 1-க்கு உட்பட்ட சத்யவானி முத்து நகர் மற்றும் வார்டு 2க்கு உட்பட்ட நேரு நகர் ஆகிய இரண்டு இடங்களில் அங்கன்வாடி பணிகளுக்கு இன்று (வெள்ளிக்கிழமை 23.08.2024) காலை 9 மணி அளவில் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி அடிக்கல் நாட்டுகிறார்.

வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் அவர்களின் தொடர் முயற்சியாலும் ஏற்பாட்டிலும், சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து (CSR) சமூக பொறுப்பு நிதி மற்றும் நமக்கு நாமே திட்டம் மூலமாக ரூபாய் 1 கோடியே 75 லட்சங்கள் செலவில் திருவெற்றியூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட மண்டலம் 1, வார்டு1ல் சத்யவானி முத்து நகர், தாழங்குப்பம் ஆகிய இரண்டு இடங்களிலும், வார்டு2ல் காட்டுக்குப்பம், நேரு நகர், எல்லையம்மன் கோவில் தெரு, உள்ளிட்ட 3 இடங்களிலும், ஆக மொத்தம் 5 இடங்களுக்கு பொதுவாக வார்டு 1 க்கு உட்பட்ட சத்யவானி முத்துநகர் மற்றும் வார்டு2 க்கு உட்பட்ட கத்திவாக்கம் நேரு நகர் பகுதியில் திராவிட முன்னேற்றக் கழக அயலக அணி தலைவரும், வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர். கலாநிதி வீராசாமி அடிக்கல் நாட்டுகிறார்.

அதனைத் தொடர்ந்து 9.30 மணியளவில் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். கலாநிதி வீராசாமி MP அவர்களின் முயற்சியால் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் (IOCL) சமூக பொறுப்பு நிதி மற்றும் நமக்கு நாமே திட்டத்தின் மூலம் திருவொற்றியூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட வார்டு 11 காலடிப்பேட்டை சென்னை 2.0 உயர்நிலைப் பள்ளி வளாகத்தில் 68 லட்சங்கள் மதிப்பீட்டில் 311, 317 இரண்டு புதிய அங்கன்வாடி கட்டிடங்களை, வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். கலாநிதி வீராசாமி இன்று (வெள்ளிக்கிழமை, 23.08.2024) காலை 9.30 மணியளவில் மாணவ, மாணவிகள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்க உள்ளார்.

இந்நிகழ்வில் சென்னை வடகிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ., திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர், வடக்கு வட்டார துணை ஆணையர் கட்டா ரவி தேஜா, திருவொற்றியூர் 1வது மண்டல குழு தலைவரும், திருவொற்றியூர் கிழக்கு பகுதி கழக செயலாளருமான தி.மு.தனியரசு, திருவொற்றியூர் மேற்கு பகுதி செயலாளர் வை.மா. அருள்தாசன், இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் பொது மேலாளர் திரு.கலைவாணன், வட்ட கழக செயலாளர் மாமன்ற உறுப்பினர் மு.சிவக்குமார், வட்டக் கழகச் செயலாளர் திரு. குறுத்து சி.முனுசாமி, மாமன்ற உறுப்பினர் கோமதி சந்தோஷ்,

மாமன்ற உறுப்பினர் திருமதி.சரண்யா கலைவாணன் மற்றும் மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழக நிர்வாகிகள், பொதுக் குழு உறுப்பினர்கள், வட்ட கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், வட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட பகுதி வட்ட அணிகளின் நிர்வாகிகள், கழக தோழர்கள், கழகமூத்த முன்னோடிகள் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள், ஊடக நனிபர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன் என்று 1-வது மண்டலக்குழுத் தலைவரும், திருவொற்றியூர் கிழக்குப் பகுதிச் செயலாளருமான தி.மு. தனியரசு கேட்டுக் கொண்டுள்ளார்.

### மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. சிறப்புரை! க.செல்வம் எம்.பி. பங்கேற்பு!

# சித்தாமூர் மேற்கு ஒன்றியக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## ஒன்றியச் செயலாளர் வி.ஏழுமலை அறிக்கை!

காஞ்சிபுரம், ஆக.23,

சித்தாமூர் மேற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் வி.ஏழுமலை விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், சித்தாமூர் மேற்கு ஒன்றிய தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் இன்று (23.8.2024 வெள்ளிக்கிழமை) காலை 9 மணிக்கு, ஸ்ரீ சக்கரா திருமண மண்டபம், கீழ்மருவத்தூரில் நடைபெறுகின்றது. கூட்டத்திற்கு ஒன்றிய அவைத் தலைவர் எஸ்.வெங்கடகிருஷ்ணன் தலைமை வகிக்கிறார். நான் ( ஒன்றிய செயலாளர் சித்தாமூர் ஒன்றியக் குழு பெருந்தலைவர் வி.ஏழுமலை ) வரவேற்றுப் பேசுகிறேன்.

இர.பாஸ்கர் என்கிற தனசேகரன், தே. நாகப்பன், குமுதாமதுரை நா. செல்வம், ச.வேதாசலம், ஆ.ஆறுமுகம், ஜி.ஜெய கண்ணன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக் கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

இதில் சிறுவேடல் க.செல்வம் எம்.பி., ப.அப்துல்மாலிக், ச.இனியரசு, டைகர் மு.குணா, பிரேமா சங்கர், க.மு.தனசேகரன், எஸ்.பி.ஜூலியஸ்சீசர், டி.ஆர்.கண்ணன், எஸ். எம்.ராம சாமி, ஏ.கே.எல்லப்பன், பி.ஆர். ஏழுமலை, பி.வி.புருஷோத் தமன், டி.சாந்ததன சேகர், கே. நாகராஜ், ஏ.என்.பாரத், எஸ்.எம்.ஜியாவுதீன், கே.முத்து, கா.பால்ராஜ், பொன்முரு கானந்தம், ஆர்.ஞானகுமார், அல்லி முத்து, எம்.ஆர்.தனசேகரன், ஜெ.ஆர்.சதீஷ்குமார், பெரு.கிருஷ்ணன், சி.பி. ரவிக்குமார், ஆ.கோ. பாண்டுரங்கன், கே.எஸ். ஆதிகேசவலு, டி.சாமி நாதன், சி.கே.ராஜேந்திரன், ஜி.தருமனி, கலைச்செல்வி ஜெகன்நாதன், க.பூபாலன், எம்.வசந்தராஜ், எம். கண்ணகி, ஆர்.வினோதினி, ஜனனி ராஜாகிருஷ்ணன், இர.குப்பன், ரேவதி வேதாசலம் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர். கீழ்மருத்வத்தூர் துளசி நன்றி கூறுகின்றனர்.

இக் கூட்டத்தில் கழக ஆக்கப்பணிகள் குறித்து ஆலோசிக்கப்படவிருப்பதால் சம்பந்தப் பட்ட அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும் படி ஒன்றியச் செயலாளர் வி.ஏழுமலை கேட்டுக் கொண்டுள்ளார்.

### அரசு துறையில் பணியாற்றும் அனைத்து மாற்றுத்திறனாளிகளுக்கு

# டி.என்.பி.எஸ்.சி.துறை தேர்வு எழுதுவதிலிருந்து விலக்களித்த முதல்வருக்கு நன்றி!

## தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்க தலைவர் ரெ.தங்கம் அறிக்கை!

சென்னை, ஆக 23-

தமிழ்நாடு முன்னேற்ற சங்க மாநிலத்தலைவரும், தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் நலவாரிய உறுப்பினர் ரெ.தங்கம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது மாற்றுத்திறனாளிகள் நலத்துறையையும் தனது நேரடி கட்டுப்பாட்டில் வைத்து கொண்டு பல்வேறு வரலாற்று திட்டங்களை அறிவித்து செயலாக்கம் செய்ததை இன்றும் நன்றியுணர்வோடு நினைவு கூறுகிறோம்.

இந்நிலையில் முதலமைச்சராக பொறுப்பேற்ற தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையையும் தனது நேரடி கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு கடந்த மூன்று ஆண்டுகளில் பல்வேறு திட்டங்களை தொடர்ந்து அறிவித்து செயலாக்கம் செய்தும் மாற்றுத்திறனாளிகளின் இதயங்களின் குடிகொண்டார்.

இந்நிலையில், மாற்றுத்திறனாளிகள் நலனில் பெரிதும் கவனம் செலுத்தும் விதமாக, சட்டமன்ற மானியக் கோரிக்கையில் தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கம் சார்பாக வைக்கப்பட்ட பல்வேறு கோரிக்கைகளான அரசு துறையில் பணியாற்றும் 50 வயது மேற்பட்ட அனைத்து வகையான மாற்றுத்திறனாளி அரசு பணியாளர்கள் பதவி உயர்வு பெற தடையாக உள்ள டிஎன்பிஎஸ்சி துறைத் தேர்வையும் ரத்து செய்து அத்தேர்விலிருந்து விலக்கு அளிக்க வேண்டும் எனவும் கோரிக்கை வைத்தோம்.

இந்த கோரிக்கைகளையும் கனிவுடன் பரிசீலத்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அரசு துறையில் பணியாற்றும் கை,கால் அங்க குறைபாடு மாற்றுத்திறனாளிகள், பார்வைத்திறன் பாதிப்பு,செவித்திறன் பாதிப்பு கற்றல் குறைபாடு, அறிவு சார் குறைபாடு மற்றும் புற உலக சிந்தனையற்ற அரசு பணியாளர்களுக்கு பதவி உயர்வு பெற தடையாக உள்ள டிஎன்பிஎஸ்சி நடத்தும் துறைத்தேர்வு எழுதுவதிலிருந்து விலக்களித்து தாயுள்ளத்தோடு அரசாணை (நிலை) எண்.11) வெளியிட்டு ஆயிரக்கணக்கான மாற்றுத்திறனாளி அரசு ஊழியர்கள் வாழ்க்கையில் விளக்கேற்றிய முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்களுக்கும் தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கம் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் கீதாஜீவன், சட்டமன்றத்தில் குரல் எழுப்பிய புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா ஆகியோருக்கும் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு ரெ.தங்கம் நன்றி தெரிவித்து அறிக்கை விடுத்துள்ளார்.

### மதுரை மாநகர் மாவட்டக் கழக

# பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. அறிவிப்பு!

மதுரை, ஆக. 23-

மதுரை மாநகர் மாவட்டக் கழகச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

மதுரை மாநகர் மாவட்டக் கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம் வருகின்ற 28.08.2024 புதன்கிழமை அன்று காலை 11.00 மணி அளவில் பசுமலை கோபால்சாமி திருமண மண்டபத்தில் அவைத்தலைவர் மா. ஒச்சுபாலு தலைமையில் நடைபெறுகிறது. எனவே மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழக, வட்டக் கழக செயலாளர்கள், ஒன்றிய, பேரூர், கிளை கழக செயலாளர்கள், அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், கழக முன்னோடிகள் மற்றும் கழக உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் :

கழக முப்பெரும் விழா, கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. வேண்டுகோள் விடுத்துள்ளார்.



கோ.தளபதி எம்.எல்.ஏ.



புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி சட்டமன்றத் தொகுதி திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், வடகாடு ஊராட்சி பள்ளத்தி விடுதி பகுதி மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் ரூபாய் 18.42 இலட்சம் மதிப்பீட்டில் 30000 லிட்டர் கொள்ளளவு கொண்ட புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைப்பதற்கான பணிகளை சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்.



திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருத்தணி மேற்கு ஒன்றியத்தில் உள்ள ஊராட்சிகளில் ஊர்தோறும் கழகக் கொடி ஏற்றுவோம் நிகழ்ச்சி மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ, தலைமையில் கழக மூத்த முன்னோடியும் சட்ட எரிப்பு உள்ளிட்ட பல்வேறு போராட்டங்களில் சிறை சென்றவர் பூண்டி கோவிந்தராஜன் கழக கொடி ஏற்றி பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார் உடன் ஒன்றிய கழகச் செயலாளர் என்.கிருஷ்ணன் , பொதுகுழு உறுப்பினர் ப.சிட்டிபாபு, நிர்வாகிகள் மாணிக்கம், இராமதாஸ், பா.டில்லிபாபு, நாகேந்திரன், கோதண்டம், ஷெரீப், குப்புசாமி, அரிபாபு, ரகுபதி, நடராஜன், சிவன், முருகேசன், சண்முகம், வேலு, வஜிஜிரம், உள்பட பலர் உள்ளனர்